# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# செய்தி மற்றும் விளம்பரம்

### மானியக் கோரிக்கை எண். 28

# அறிவிப்புகள்
## 2018–2019


### கடம்பூர் ராஜூ
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்



தமிழ்நாடு அரசு
2018

**1. பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்தும்போது பணிபுரிந்த ஆண்டுகளுக்கு ஏற்றவாறு ரூ.50,000 முதல் ரூ.2,00,000 வரை வழங்கப்பட்டு வரும் குடும்ப உதவி நிதி ரூ.75,000 முதல் ரூ.3,00,000 வரை உயர்த்தி வழங்கப்படும்.**

பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் அன்னாரது குடும்பத்தினருக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/– ஆகவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.1,00,000/–லிருந்து ரூ.1,50,000/– ஆகவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.1,50,000/–லிருந்து ரூ.2,25,000/– ஆகவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.2,00,000/–லிருந்து ரூ.3,00,000/– ஆகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப உதவி நிதி உயர்த்தி வழங்கப்படும்.

**2. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில், இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இசை அறிஞர்களாலும், வித்வான்களாலும், இசை மகா சமுத்திரம் என்றும், மாமேதை என்றும் போற்றிப் புகழப்பட்ட இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கப்படும்.

**3. தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பாரதமாதா நினைவாலயம் அமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நூலகத்தோடு கூடிய பாரதமாதா நினைவாலயம் அமைக்கப்படும்.

**4. சென்னை மாநகரில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் பழமை மாறாமல் ரூ.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை மாநகரில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் பழமை மாறாமல் **ரூ.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

**5. திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் உள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் உள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.

## 6. எட்டு நினைவகங்களில் உள்ள 110 பழைய புகைப்படங்கள் ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தந்தை பெரியார்–பேரறிஞர் அண்ணா நினைவகம் (ஈரோடு), மூதறிஞர் இராஜாஜி இல்லம் (கிருஷ்ணகிரி), பிஷப் கால்டுவெல் இல்லம், (திருநெல்வேலி), தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் (நாகப்பட்டினம்), கோபால் நாயக்கர் மணிமண்டபம் (திண்டுக்கல்), பெருந்தலைவர் காமராசர் இல்லம் (விருதுநகர்), முத்து மண்டபம் (வேலூர்) மற்றும் காந்தி நினைவு மண்டபம் (கன்னியாகுமரி) ஆகிய மாவட்ட நினைவகங்களில் மொத்தம் உள்ள 110 பழைய புகைப்படங்களை ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்படும்.

**7. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு திரையரங்கம் ரூ.142 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு திரையரங்க கட்டட சீரமைப்பு ரூ.89 இலட்சம் மதிப்பீட்டிலும், மின் அமைப்பு பணி ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலும், குளிர்சாதன வசதி ரூ.32.50 இலட்சம் மதிப்பீட்டிலும் சீரமைக்கப்படும். மேலும் ஒலியமைப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**8. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் வட்டச்சுற்று மின்தொடர் கட்டமைப்பு (Ring Main Grid - RMG) ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மின் அளவினை இயல்பான நிலையில் பராமரித்திடவும், மறுசீரமைத்திடவும் இவ்வளாகத்தில் வட்டச்சுற்று மின்தொடர் கட்டமைப்பு (Ring Main Grid - RMG) ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**9. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எல்இடி வீடியோ படக்காட்சி வாகனங்களில் ரூ. 6.50 இலட்சம் செலவில் அரசு முக்கிய நிகழ்ச்சிகள் நேரலை ஒளிபரப்பு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.**

அரசு முக்கிய நிகழ்ச்சிகளை தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் உள்ள எல்இடி வீடியோ படக்காட்சி வாகனங்களில் நேரலை ஒளிபரப்பாக திரையிடும் வகையில், **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தொடரும் செலவினமாக ரூ.6.50 இலட்சம் செலவில் சிம்கார்டுகள் பொருத்தப்பட்டு நேரலை ஒளிபரப்பு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.

## 10. அரசு பொருட்காட்சிகளில் அரங்குகள் அமைத்திட இரும்பு வளைவு தகரங்கள் ரூ.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

அரசு பொருட்காட்சிகளில் அரங்கங்கள் அமைத்திட தற்போது நல்ல நிலையில் உள்ள 11,170 வளைவுத் தகரங்கள் ஒரே சமயத்தில் இரண்டு பொருட்காட்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடிகிறது. பல தருணங்களில் ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் அரசு பொருட்காட்சிகள் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு 3ஆவது பொருட்காட்சியிலும் அரங்கங்கள் அமைத்திட ஏதுவாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.20 இலட்சம் செலவில் புதியதாக இரும்பு வளைவுத் தகரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**11. அரசு பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் ரூ. 2 ஆயிரத்திலிருந்து ரூ. 5 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அரசு பொருட்காட்சியில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம், தொடரும் செலவினமாக, ரூ.2 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

**கடம்பூர் ராஜு**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்